பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 28 உ திங்கட்கிழமை (15-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 24 கதிர்: 222

# திருநெல்வேலி, உடுப்பிட்டியில் விமான தாக்குதல்! 6 பேர் பலி!!

## சந்தைமீது 4 ஆவது தடவை தாக்கு

யாழ்ப்பாணம், அக். 15

திருநெல்வேலியிலும், உடுப்பிட்டியிலும் நேற்று பொம்மர்கள் கடும் தாக்குதல் நடத்தின. இரண்டு சம்பவங்களிலும் மொத்தம் ஆறு பொதுமக்கள் பலியானார்கள்.

திருநெல்வேலிச் சந்தைமீது நேற்று நண்பகல் 2-10 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் ஒரு பெண் உட்பட மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர். எழுவர் படுகாயமடைந்தனர்.

திருநெல்வேலிச் சந்தை நேற்றுடன் நான்கு தடவைகள் பொம்மர் தாக்குதலுக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடமராட்சியில் பருத்தித்துறை மற்றும் யாழ்ப்பாணத்தில் அரியாலை ஆகிய இடங்களிலும் நேற்று பொம்மர் தாக்குதல்கள் நடந்தன

திருநெல்வேலிச் சந்தைமீது நடத்தப்பட்ட தாக்குதலில் பெண் ஒருவரும், மற்றொரு ஆணும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இன்னும் ஒருவர் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு மரணமானார்.

திருநெல்வேலி மாரியம்மன் வீதியைச் சேர்ந்த எஸ். இராஜேஸ்வரி [32 வயது], சந்தையில் வியாபாரம் செய்து வந்தவரான சுப்பிரமணியம் [50 வயது], கந்தர்மடம், பிறவுண் வீதியைச் சேர்ந்த சைமன் சிங் [65 வயது] ஆகியோரே உயிரிழந்த மூவரும் ஆவர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த ஏழு பேர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டியில் 3 பேர் பலி!

உடுப்பிட்டி, அக். 15

உடுப்பிட்டி, பருத்தித்துறைப்பகுதிகளிலும் நேற்று நண்பகல் 12-15 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

உடுப்பிட்டியில்நடந்த தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தனர். உடுப்பிட்டிப் பகுதியில் அகதியாக வந்தவர்கள் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர்.

உடுப்பிட்டிச் சந்தியிலும் சூசையப்பர் தேவாலயப்பகுதியிலும் குண்டுகள் வீசப்பட்டன. குண்டு வீச்சினால் தேவாலயம் பலத்த சேதமடைந்தது.

உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்களான நடராஜா குமரதாஸ் (13 வயது), விநயகமூர்த்தி மோகனராசா (15 வயது) தம்பாட்டியைச் சேர்ந்த தனபாலசிங்கம் தன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கோட்டைப் பகுதியில் ஹெலி கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், அக். 15

நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். நகரப் பகுதிக்கு மேல் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று கோட்டையை அண்டிய பகுதியில் 'கிரனேட்' தாக்குதலை மேற்கொண்டது.

வீசப்பட்ட கிரனேட்டுகளில் சில கோட்டைப் பகுதிக்கு வெளியேயே வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை —

நேற்று நண்பகல் அளவில் பாஷையூர், மணியம் தோட்டம் பகுதிகளில் ஹெலி ஒன்று பரவலாக கலிபர் தாக்குதலை நடத்தியது. [ஒ-6]

### குப்பிளானில் நேற்று முன்தினம்

## ஷெல்லால் கை இழந்தவர் ஆஸ்பத்திரியில் மரணம்

குப்பிளானில் ஷெல்விழுந்து வெடித்து, வலது கை துண்டிக்கப்பட்ட நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் நேற்று முன்தினம் (சனி) நள்ளிரவு மரணமானார்.

நடேசபிள்ளை உதயகுமார் (வயது26) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்று முன்தினம் (சனி) பகல் நடந்த இந்தச் சம்பவத்தில் இறந்தவரின் மகளும் காயமடைந்திருந்தார் என்பது தெரிந்ததே.

கூடுதலான இரத்தப் பெருக்கே இவரின் மரணத்துக்குக் காரணம என டாக்டர்கள் தெரிவித்தனர்.

இரத்த வங்கியில் இரத்தம் சேமிப்பில் இருந்திருந்தால் இவரைக் காப்பாற்றியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வங்கியில் இரத்தம் இல்லாததால் கடந்த வெள்ளிக்கிழமையும் சங்கானையில் ஹெலித் தாக்குதலுக்கு இலக்கான காரைநகர் வாசி ஒருவரும் ஆஸ்பத்திரியில் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

## 15 லொறிகளில் பொருள்கள் கிளிநொச்சிக்கு வந்தன

யாழ்ப்பாணம், அக். 15

கொழும்பில் இருந்து 15 லொறிகளில் உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் எடுத்த முயற்சிகளை அடுத்து தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராஜா செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் இந்த உணவுப்பொருள்களை கொழும்பில் இருந்து கொண்டு வந்தார்.

தொடர்ந்தும் லொறி மூலம் உணவுப்பொருள்களைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொண்டுவரப்படும் பொருள்கள் உடனடியாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படுகிறது. (உ-3)

## மிதி வெடியில் தொழிலாளி கால் இழப்பு

குருநகர், அக். 15

யாழ். றேகடிக் கடற்பகுதியில் நேற்று இடம் பெற்ற மிதிவெடி விபத்தில் வீச்சுவலைத் தொழிலாளி ஒருவர் காலை இழந்தார்.

திருநகரைச் சேர்ந்த வேலன் சின்னத்தம்பி சீனி (வயது 45) என்பவரே காலை இழந்தவராவார். (ஒ-51)

## பருத்தித்துறையில் 5 வீடுகள் நேற்று குண்டு வீச்சில் சேதம்

பருத்தித்துறை, அக் 15

பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் அருகருகே இருந்த மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. மற்றும் இரு வீடுகளும் பாதிப்படைந்தன. அந்த வீடுகளில் இருந்த பொருள்களும் நாசமாகின.

ஒரு குண்டு கிணறு ஒன்றினுள் விழுந்து வெடிக்காத நிலையில் காணப்பட்டது.

வீடுகளில் இருந்தவர்கள் முன் எச்சரிக்கையாக பதுங்கு குழிகளினுள் சென்றுவிட்டதால் உயிர்ச் சேதம் எதுவும் நிகழவில்லை. (ஒ-15-118-94)

## அரியாலையிலும் குண்டு வீச்சு

அரியாலை. அக்.15

அரியாலையிலும் நேற்று புதிய பொம்மர் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது.

திருநெல்வேலிப் பகுதியில் குண்டுகளை வீசிச்சென்ற சில நிமிட நேரத்தில் பொம்மர் அரியாலையிலும் குண்டு வீசியது.

குண்டு வீச்சில் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை பலத்த சேதமடைந்தது, அங்கிருந்த தளபாடங்களும் நாசமாகின.

அப்பகுதியில் வீடு ஒன்றும் பெரும் சேதத்திற்குள்ளானது. (ஒ 5)

### மாணவர் பாதுகாப்புக் கருதி

## நீல - வெள்ளைக் கொடிகளை பாடசாலைகளில் பறக்க விடுங்கள்!

யாழ்ப்பாணம், அக். 15

இன்று பாடசாலைகள் ஆரம்பமாகும் போது மாணவர்களின் நலன் கருதி, வெள்ளைநிறமும், கடும் நீலமும் சேர்த்துத் தைத்த கொடிகளைப் பாடசாலைக் கட்டடங்களில் பறக்க விடுமாறு கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

பாடசாலைகளின் பாதுகாப்புச் சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாடசாலைகள் யாவும் இன்று 15ஆம் திகதி [illegible] படஇருப்பதால் [illegible] மாவட்டப் பாடசாலை அதிபர்கள் யாவரும் பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

★ பாடசாலைக் கட்டடங்களில் சம அளவு துணிக [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கோட்டைக் கட்டடங்கள் இப்போது குட்டிச் சுவர்கள்!

யாழ்ப்பாணம், அக். 15

கடந்த நான்கு மாதங்களாக உலகளாவிய ரீதியில் பிரசித்திபெற்றயாழ்ப்பாணம் கோட்டை இப்போது பெரும் சிதைவுகளுடன் காணப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் "பசிலன் - 2000" குண்டுத் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்கான யாழ் - கோட்டைக்குள் எந்தக் கட்டடமும் தற்போது பாவனைக்கு உகந்த நிலையில் இல்லை. எல்லாக் கட்டடங்களும் புலிகளின் தாக்குதலினால் முற்றாகச் சேதமுற்றுக் காணப்படுகின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### மல்லிகைப் பந்தல்

இந்தப் பெயரை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருங்கள். இந்த மண்ணில் நவ இலக்கியச் சிந்தனையை மலரச் செய்வதற்கான வெளியீட்டகம் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஒரு தடவை மல்லிகையில் சந்தியுங்களேன். [14425]

### "இலவசம் நாவல்கள்"

சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் மீரா வெளியீடுகளாக வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம்.; திருக்கணிதம், சாவகச்சேரி.; ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். [14386]

### வைத்திய சேவை

Dr. C. C. S ராஜன் கிருஸ்ணா கிளினிக் அராலி வீதி [பொம்மை வெளி] யாழ்ப்பாணம். [13893]

### பரிஸ் ரெக்ஸ்

105, அரசடி வீதி, தட்டா தெரு, பிரவுண் வீதி, சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கட்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (14446)

### விற்பனைக்கு

பனைமரம், திராந்தி, சீற், கதவு, யன்னல், கிறில்கள் [ஸ்ரீல்] விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்; கைலாச கோவில், பின்வீதி, நல்லூர். [14444]

## மூன்றாண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
12 - 07 - 1959

மறைவு:
19 - 10 - 1987

திதி:
15 - 10 - 1990

### துரைஐயா பாலச்சந்திரன்

(குமலர் ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் மகன்)

கறந்த நற்பாலாயுள்ளம்
கபடமற்றுறைந்துள்ளோனே
சிறந்த பாசத்தால் எங்கள் சிந்தையில் உள்ளோனே
பறந்ததேன் உலகைவிட்டு மறந்திடோம் உன்னை!
புரட்டர்கள் குண்டு புரையோடிப் பாய்ந்ததுவோ
உன் அன்பு மார்பினிலே! எங்கள்
உடலின் உணர்ச்சிகள் இருக்கும் வரையில்
உந்தன் நினைவு எங்கள் மனதில் ஊறிவாழுமே
கண்ணீராய் வடிக்கின்றோம்
கதி கலங்கி ஆடுகின்றோம்
காலம் தான் மூன்றாகியும்
உலகெல்லாம் தேடுகின்றோம்.

பிரிவால் துயரும்:
குடும்பத்தினர்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

[14439]

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
22- 03- 1933

மறைவு:
14- 09- 1990

### திரு. டானியல் தேவசகாயம்

(Chief M. L. T. யாழ். போதனா வைத்தியசாலை)

அன்பின் உருவாய், பண்பின் பதிவிடமாய், அமைதியின் உறைவிடமாய் யாழ்போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தைத் தனது குடும்பத்திலும், மேலாக மதித்து தன் கடமையிலே கண்ணும் கருத்துமாய் வாழ்ந்தவரும், சக உத்தியோகத்தரினால் "தேவா" என அன்பாக அழைக்கப்பட்டவருமாகிய திரு டானியல் தேவசகாயத்தின் ஆன்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆய்வுகூட ஊழியர்கள்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (14390)

## ஒருவர் காயம் வீடு சேதம்

மல்லாகம், அக். 15

கடந்த புதன்கிழமை மாலை கொல்லன் கலட்டியில் விழுந்த ஷெல்லினால் சி. சிவநேசன் (வயது 53) என்பவர் காயம் அடைந்தார். வீடும் கராஜும் சேதம் அடைந்தன. மற்றும் ஒரு ஷெல் அளவெட்டி வடக்கு ஐயனார் கோவிலுக்கு சமீபமாக விழுந்து வெடித்தது. எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (இ-ரி)

## ஆடலிசை மேடை நாடகம்

அச்சுவேலி, அக். 15

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட "போர் மண்ணிலே புனிதத் தாய்" ஆடலிசை மேடை நாடகம் மேடை ஏற்றப்பட்டு வருகிறது.

போர் மண்ணிலே புனிதத் தாய் ஆடலிசை மேடை நாடகத்தை கண்டு களிக்க விரும்புவோர் மக்கள் முன்னணி அச்சுவேலிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-11)

## நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, அக். 15

தற்போது நிலவும் வெப்பம் காரணமாக நாய்களுக்கு விசர்நோய் வரக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதால் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

வெப்பம் காரணமாக இப் பகுதியின் பல இடங்களில் கோழிகள் திடீர் திடீரென இறக்கின்றனவாம். [ஒ-117]

## சந்தைமீண்டும் இயங்குகிறது

மல்லாகம்' அக். 15

கடந்த பல வருடங்களாக இயங்காதிருந்த அளவெட்டி இறால் மடம் சந்தைமீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

அளவெட்டி வடக்கு சிற்றூர் அவையினரால் கடந்த சனிக்கிழமை இந்தச் சந்தை திறந்து வைக்கப்பட்டது. (ஒ-5)

## சாவகச்சேரி மானிப்பாய் பஸ்சேவை

யாழ்ப்பாணம், அக். 15

சாவகச்சேரி, மானிப்பாய் பகுதிகளுக்கு இடைப்பட்ட மக்களின் நலன்கருதி சாவகச்சேரியிலிருந்து மானிப்பாய் ஆஸ்பத்திரிவரையான மினி பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 10 மணியளவில் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து மேற்படி பஸ் புறப்படும் [ஒ - 15]

## ★ பொன் விழா ★



1940 - 10 - 20 — 1990 - 10 - 20 வரையிலான 50 வருடங்கள் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள், உலக மக்களுக்குச் செய்த அவதாரப் பணியை நினைவுகூருமுகமாக உலகம் முழுவதும் 20 - 10 - 90 அன்று பொன் விழா கொண்டாடப்படுகின்றது, இதனையொட்டி 19 - 10 - 90 — 25 - 10 - 90 வரையிலான காலப் பகுதியை - 'சாயி சேவா வாரம்' எனக்கொண்டு பொதுப்பணி பல புரிவோமாக.

### "ஹப்பி ரெக்ஸ்ற்"

104, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்:

[14457]

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### நாகலட்சுமி பசுபதிச்செட்டியார்

தோற்றம்:- 22 - 11 - 1909

மறைவு:- 30 - 09 - 1990

சென்ற 30-09-90 இல் இறைபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு திருமதி நாகலட்சுமி பசுபதிச் செட்டியாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனை இன்று அவர் வாழ்ந்த இல்லத்தில் நடைபெறுகிறது.

இல்லறமாம் நல்லறத்தைத் திறம்பட நடத்தி வாழ்வாங்கு வாழ்ந்து, சுற்றத்தார், சூழவுள்ளோர் செழித்து வாழ வழி வகுத்து சித்தி விநாயகன் வண்ணைவைத்தீஸ்வரன் மேல் சிந்தை வைத்து சிறுமை தீண்டா தெய்வீக விளக்காக நித்தியாக்கினியாக ஆயிரம் பிறைகண்ட அன்னையின் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பு பூத்துப் பொலிந்து நிற்கும் நிலை கண்டு அமைதி பெறுவோமாக.

– குடும்பத்தார்.

473, கே. கே. எஸ், வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[சி-5309]

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் / வங்கிகள் / ஏனையதுறைகளில்

### எழுதுவினைஞர்களுக்கான போட்டிப்பரீட்சை

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான 2 மாத

## விசேட பயிற்சி வகுப்புகள்

திறமை வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை

ஆரம்பம்: 20 — 10 — 90 முற்பகல் 9மணி

பாட நெறி:- மொழித்தேர்ச்சி, எண்திறனும் பொது விவேகமும்.

- ★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
- ★ வாரத்தில் 3 நாட்கள் மு. ப. 9 — 12 மணி வரை
- ★ கட்டணம் ரூபா 250. 00 (முழுப் பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:- நேரில் [மு. ப. 9 — 11]

## ★ அஸ்ரன் இன்ஸ்ரியூட் ★

[illegible]/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கருகாமையில்) [சி-5310]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசின் புதிய பிளவுகோல்

வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைப்பது சம்பந்தமாக இறுதி முடிவெடுக்கவெனக் கூடிய அனைத்துக் கட்சி மாநாடு தோல்வியில் முடிவடைந்துள்ளது. இந்த மாநாட்டை முஸ்லிம் அரசியல் கட்சிகள் புறக்கணித்துள்ளன; இனிமேல் எந்தக் கட்டத்திலும் அனைத்துக்கட்சி மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் அவை அறிவித்துள்ளன.

தமிழர்களைத் திருப்திப்படுத்துவதற்கு முனைவதாகக் காட்டிக் கொள்வதற்காக அரசாங்கம் 1984-இல் அனைத்துக் கட்சி மாநாடு என்ற புதிய கோலம் போட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை அனைத்துக் கட்சி மாநாட்டினால் தமிழர் உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக உருப்படியாக எதனையும் சாதித்துவிட முடியவில்லை. காலத்துக்குக் காலம், இடைவெளி விட்டு, அது கூடுவதும் கலைவதுமாகக் காலம் கடத்தப்பட்டதே அன்றி அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகவோ, தமிழர் உரிமைகள் சம்பந்தமாகவோ நியாயமான முடிவு எதனையும் அதனால் மேற்கொள்ள இயலவில்லை.

தமிழர்கள் விடயத்தில், அவர்களின் அரசியல் உரிமைகளைப் பொறுத்த மட்டில், சிங்களத் தலைவர்களிடம் தாராள மனப்பான்மை இல்லை; புரிந்துணர்வு இல்லை என்பதையே இந்நிலை எடுத்துக் காட்டுகிறது.

இதற்கு மேலதிகமாக தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு முஸ்லிம்களின் சம்மதமும் தேவை என்ற ஒரு புதிய பரிமாணம் இப்போது புகுத்தப்பட்டிருக்கிறது. இனப்பிரச்சினையைத் தீர்க்க முஸ்லிம்களின் ஒத்துழைப்புத் தேவை என்ற நிலைப்பாடு மாறி, சம்மதம் தேவை என்பது நிபந்தனையாக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் சம்மதிக்காவிடில், தமிழர்கள் கேட்கும் எதையும் வழங்கமுடியாது என்ற பிளவுகோலை அரசாங்கம் வெகு சாதுரியமாகக் கடைந்து வடித்துள்ளது, இந்தப் பிளவுகோல் கிழக்கில் ஒரு குழப்பும் கருவியாக இருந்து பிரச்சினையை நிரந்தரமயப்படுத்த வேண்டும் என்பதே அரசின் உள்நோக்கம்.

இந்தப் பிளவுகோலைத் தறித்து, சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்குள் உள்ள பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்ளுவது மிகவும் அவசியம். பெரும்பான்மையினர் சதியில் வீழ்ந்து தமிழர்களுடனான உறவை, சகவாழ்வை முறித்துக் கொள்ள கிழக்கு முஸ்லிம் மக்கள்-தலைவர்கள் முனையக்கூடாது.

தமிழர்களைப் போல கிழக்கில் முஸ்லிம்களுக்கும் பிரச்சினைகள் உண்டு; போதிய உரிமைகள் இல்லை: அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படவில்லை. என்பது உண்மையே. அதற்காகத் தமிழர்களும் முஸ்லிம்களும் முட்டி மோதவேண்டும் என்பதல்ல. ஒருவரை அடுத்தவர் அடித்துக்கொண்டுதான் இரு சாராரும் தமது உரிமைகளைப் பெறவேண்டும், நலன்களைக் காக்கவேண்டும் என்பதல்ல.

---

வடபகுதியில் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால்

# கிளிநொச்சி, முல்லைத்தீவில்

# நெற்செய்கை தடைப்படும் ஆபத்து

## டீசல் தட்டுப்பாடே முக்கிய காரணம்

யாழ்ப்பாணம், அக். 15

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இம்முறை பெரும்போக நெற்செய்கை பெருமளவு தடைப்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இவ்விரு மாவட்டங்களிலும் உர விநியோகம் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பன தடைப்பட்டுள்ளன.

இதனால் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் தயங்குகிறார்கள்.

வழமையாக இந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் வயல்களை உழுவதற்கு டிராக்டர்களையே அதிகளவில் பாவிப்பது வழக்கம்,

ஆனால் இப்போதைய டீசல் விலையில் இந்த வேலைகளை டிராக்டர்களைக் கொண்டு மேற்கொள்வது சாத்தியமில்லை.

எனினும் ஒரு சில விவசாயிகள் மாட்டு உழவுகள் மூலம் விவசாய முறநுசியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளை டிராக்டர் உழவு இல்லாததால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல ஆயிரக் கணக்கான வயல்கள் கவனிப்பாரற்ற நிலையில் ''பரிதாப நிலையில்'' வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இந்த நிலை தொடருமாயின் இந்த இரு மாவட்டங்களில் நெல் உற்பத்தி பெருமளவில் தடைபட்டு அதனால் குடாநாடு உட்பட வடபகுதியில் அடுத்த வருடத்தில் பெரும் அரிசிப் பற்றாக்குறை உருவாகும் என்பது திண்ணம் என்று விவசாயத்தோடு தொடர்புடையவர்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-5-6)

## இன்று கூட்டம்

கொழும்புத்துறை, அக். 15

இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி. இன்று திங்கட்கிழமை காலை10மணியளவில் தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

ஐ. நா. ஸ்தானிகராலய யாழ். கிளை முன்பாக கூட்டத்தை நடத்துவதற்கு முடிவாகியுள்ளது.

(ஓ - 30)

## நிவாரணம் இல்லை

தென்மராட்சி, அக்: 15

ஆனையிறவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து பளைப்பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ - 117]

# பனைமட்டை ஏற்றி வந்த டிராக்டர் மீதும் சூடு!

தென்மராட்சி, அக்: 15

கடந்த வியாழனன்று முகமாலை கிளாலி வீதியில் பனைமட்டை ஏற்றிக் கொண்டு சென்ற டிராக்டரின் மீது ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலினால் வாகனத்திலிருந்த பனை மட்டைகள் சிதறின.

டிராக்டரில் வந்தவர்கள் அதனை விட்டு இறங்கி ஓடி மரங்களுக்குப் பின்னால் ஒளித்ததனால் காயம் ஏதுமின்றித் தப்பிக் கொண்டனர். [உ - 117]

# கப்பல் மூலம் மருந்து கொண்டு வருவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், அக். 14

யாழ். மாவட்டத்துக்கு அவசரமாகத் தேவைப்படும் மருந்து வகைகளை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான முயற்சியில் தனியார் மருந்துச்சாலை (பாமஸி) உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வடபகுதியில் தற்பொழுது மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்பதும், காலாவதியான சில மருந்து வகைகளும் கூட விற்பனையாகி வருகின்றன என்பதும் தெரிந்தவையே.

கப்பல் மூலம் கொண்டுவரப்படும் பட்சத்தில் இப்போது அதிக விலையில் விற்கப்பட்டு வரும் மருந்துகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[ஓ-3]

## அகதி சிறுவன் மரணம்

தென்மராட்சி, அக். 15

இளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை அகதி முகாமில் தங்கியிருந்த ஏழு வயது சிறுவன் திடீரென மரணமான சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது.

பாம்புக்கடித்ததினால் சிறுவன் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. [உ-117]

# பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எஸ். டி. கூறும் யோசனை

கொழும்பு, அக். 15

அனைத்து அரசியல் கட்சிகளும் தேசபக்தி ஐக்கிய முன்னணி ஒன்றை ஏற்படுத்தி ஒரு புதிய அரசமைப்பை உருவாக்குவதே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த ஒரே வழி.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, இவ்வாறு கருத்தை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணித் தலைவர் எஸ். டி. பண்டாரநாயக்காவும் - செயலாளர் ஆரிய புலேகொடவும் இது தொடர்பான அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

புதிய அரசமைப்பில் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் தேசிய சிறுபான்மை இனங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்' என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 9)

## ஷெல்லினால் படுகாயம்

தென்மராட்சி, அக். 15

கடந்த வெள்ளி இரவு மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் வெடித்ததால் இரு இளைஞர்கள் படுகாயமுற்றனர். (உ-117)

# யாழ். தொலைத் தொடர்பு பணிமனையில் திருட்டு!

யாழ்ப்பாணம், அக். 15

யாழ். சிறாம்பியடி வேன் மணியம் கட்டடத்தில் உள்ள தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் கடந்த வாரம் உள்ளக வேலைகள் நடைபெற்றன. பெரும்பாலான ஊழியர்கள் கடமைக்கு வந்திருந்தனர்.

ஊரடங்கு அமுலில் இருந்த காலத்தில் மேற்படி திணைக்களத்தில் இருந்த தொலைபேசிகள், வயர்கள், தட்டச்சு இயந்திரங்கள், இரும்பு அலுமாரிகள் உட்பட பெறுமதியான பலபொருள்கள் காணாமற்போய்விட்டன என்று பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் திரு. அம்பிகைராஜா தெரிவித்தார்.

பொருள்களின் மொத்தப் பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லைஎன்றும், விரைவில் பண்ணையில் உள்ள தொலைத்தொடர்பு திணைக்களத்தின் சேதங்களையும் சென்று பார்த்தபின் மொத்த மதிப்பீடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

# நெடுந்தீவிலிருந்து ஏனைய பகுதிகளுக்குஉணவுபொருள்

நெடுந்தீவு, அக். 15

கடந்தமாதம் சிகிரியா கப்பல்மூலம் நெடுந்தீவில் இறக்கப்பட்ட மாவு, சீனி உட்பட அத்தியாவசிய பொருள்கள் தற்போது அங்கிருந்து புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கு வள்ளங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

நெடுந்தீவுக்கு மூன்றுமாதங்களுக்குப் போதுமான பொருள்கள் கையிருப்பில் வைக்கப்படுமென்றும் மிகுதியே மற்ற இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-111)

## ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு ரூ. 7 கோடி

கொழும்பு, அக். 15

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியின் அபிவிருத்திக்காக அடுத்த ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஏழு கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

(இ - எ)

## ஷெல் தாக்கி மரணம்

உடுப்பிட்டி, அக். 15

ஷெல் தாக்கி முன்னாள் கடற்படை வீரர் மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்குச் சமீபமாக இச்சம்பவம் இடம் பெற்றது.

இறந்தவர் எஸ். பாலசிங்கம்.

எஸ். கதிரிப்பிள்ளை, இராசேந்திரம் ஆகியோர் சம்பவத்தில் காயம் அடைந்தனர். (இ-ரி)

# மட்டக்களப்பு பகுதி ஆஸ்பத்திரிகள் தொடர்ந்து இயங்காத நிலையில்

மட்டக்களப்பு, அக். 15

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகள் இயங்காததால் அகதிகளும், பொது மக்களும் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அகதிமுகாம்களில் வயிற்றோட்டம், கண்நோய், அம்மைநோய் என்பன பரவத் தொடங்கியுள்ளன.

வாகரை, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் கடமை ஆற்றிய டாக்டர்கள் மட்டக்களப்பு நகரப் பகுதிக்கு வந்துள்ளனர்.

ஏறாவூர் வைத்தியசாலையில் கடமையாற்ற தமிழ் டாக்டர்களும், ஊழியர்களும் மறுப்புத் தெரிவித்துள்ளனர். களுவாஞ்சிக்குடியில் வெளிநோயாளர் பகுதி [illegible] இயங்குகின்றது.

செங்கலடி வைத்தியசாலை மூடப்பட்டு கிழக்கு பல்கலைக் கழக அகதிகள் முகாமில் இயங்குகிறது.

மற்றும் கதிரவெளி, மாங்கேணி, மீராவோடை, சந்திவெளி, புல்லுமலை, உன்னிச்சை, மகிழவெட்டுவான், துறைநீலாவணை, பக்கி, மண்டபத்தடி ஆகிய வைத்தியசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

பிரஸ்தாப பகுதிகளுக்கு அடிக்கடி பிரெஞ்சு டாக்டர்கள் விஜயம் செய்து கிளினிக் செய்து வருகின்றனர்.

(இ - 9)

# கிளிநொச்சிப் பகுதி பாடசாலை வழமைபோல் இயங்குகின்றன

கிளிநொச்சி, அக். 15

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் தற்போது வழமைபோல் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் முன்னர் இராணுவத்தினர் முகாமிட்டிருந்ததால், அந்தப் பாடசாலை இயங்குவதில் தடங்கள் ஏற்பட்டுள்ளது.

ஏனைய பாடசாலைகளில் மாணவர்களில் வரவு அதிகமாக உள்ள போதிலும், ஆசிரியர்களின் வரவு குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-76]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோட்டை வீழ்ந்த அன்று பகவானின் அற்புதம்!

நவாலி, அக். 15

யாழ்ப்பாணம் கோட்டை, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்த செப்டெம்பர் 26 ஆம் திகதி ஆனைக் கோட்டையில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

ஆனைக்கோட்டை, சங்கரப்பிள்ளை வீதியில் உள்ள ஒருவர் தமது சுவாமி அறையில் வைத்துப் பூசித்துவரும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் உருவப்படத்திலிருந்து 26 ஆம் திகதி காலையில் விபூதிப் பிரசாதம் சொரிந்திருக்கக் காணப்பட்டது.

வீட்டுச் சொந்தக்காரரும், சாயிபக்தையுமான திருமதி புஷ்பா ஸ்ரீனிவாசகம், காலையில் அதைக்கண்ட போதிலும் பெரிதாகப் பொருட்படுத்தாமல்இருந்துவிட்டார்.

ஆனால் காலைப் பிரார்த்தனைக்கு அங்கு சென்ற போது பகவானிடம் இருந்து திருநீறு சொரிவதைக் கண்டு பரவசமடைந்துவிட்டார்!

நேற்றுவரை பகவான்படத்திலிருந்து தொடர்ந்து பிரசாதம் சொரிந்து வருவதாக அவர் தெரிவித்தார். ஏராளமான மக்கள் வந்து அந்த அற்புதக் காட்சியைத் தரிசித்துச் செல்கிறார்கள்.

இதேபோல நவாலியில் சம்பந்தப் பிள்ளையார் கோவிலுக்குப் பின்னால் அமைந்திருக்கும் திரு. சபாநாயகம் வீட்டிலும் பகவான் சாயிபாபாவின் திருவுருவப் படத்தின் கையிலிருந்து விபூதி, குங்குமம், தேன் ஆகியன சொரிந்து வருகின்றன. ஆவணி விநாயகர் சதுர்த்தி தினத்திலிருந்து இந்த அற்புதம் நடந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கும் ஏராளமானவர்கள் வந்து தரிசித்துச் செல்வதைக் காண முடிந்தது.

[அ 100-3-5]

## வல்வையில் சீனச் சகடை

நேற்றுக்காலை 9-30 மணியளவில் வல்வெட்டித்துறைப் பகுதியை ஊடறுத்துக் கொண்டு உறுமியபடி சீனச் சகடை விமானம் சென்றது.

சகடையின் சத்தத்தைக் கேட்டதும் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பதுங்கு குழிகளுக்குள் ஓடிப் புகுந்து கொண்டனர்.

எனினும் தாக்குதல் ஏதும் நடைபெறவில்லை.

அதன் பின்னர் சிறிது நேரத்தில் ஹெலி ஒன்றும் பறந்து வந்தது. அது கொழும்புப் பத்திரிகைகளை வீசிவிட்டுச் சென்றது.

[ஒ-6]


## விசேட அறிவித்தல்

1990 Dec, 91 Apr நடைபெறவுள்ள
B. A, G. A. Q. பரீட்சைக்கான (வெளிவாரி)
விண்ணப்பம்

★ பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ இது வரை விண்ணப்பிக்க தவறிய மாணவர்கள் தமது பதிவேட்டு இலக்கத்தினைக் குறிப்பிட்டு பேராதனை பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

★ இது தொடர்பாக விபரங்கள் தேவைப்படின் 15-10-90 முதல் காலை 9 — 11 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

B. A, G. A. Q விரிவுரைகள் 20 - 10 - 90 முதல் மீண்டும் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:- நேரில்

**அஸ்ரன் இன்ஸ்ரியூட்**
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[மக்கள் வங்கிக்கருகாமையில்]

(சி-5304)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
அன்ரனற் அருந்ததி அருளானந்தம்
[மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை-ஊழியர்]

ஆண்டவன் படைப்பு: 1961 - 09 - 07
அந்நியர் அழிப்பு: 1987 - 10 - 15

அன்பின் திருவுருவாய் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எமை விட்டு நீங்கி மீளாத்துயில்கொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகல்வதில்லை

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிராத்திக்கும்
பெற்றோர், சகோதரிகள்,
உறவினர்.

அளவெட்டி தெற்கு. [1445]

## கிளிநொச்சி செயலகம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், அக்.15

கிளிநொச்சிச் செயலகம் இன்று திங்கள் முதல் விவசாயத் திணைக்களக் கட்டடத்தில் இயங்க இருக்கிறது.

ஜெயந்தி நகரில் இயங்கி வந்த செயலகம் மக்கள் வசதிக்காக கண்டி வீதியில் உள்ள விவசாயத் திணைக்களக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (ஒ-3)

## கூரையிலிருந்து விழுந்து மூவர் காயம்

யாழ்ப்பாணம், அக் 15

யாழ். போதனாவைத்தியசாலையில் நேற்று முன்தினம் (சனியன்று) திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த மூவர் கூரையிலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்தனர்.

கூரை சாரமரம் முறிந்ததாலேயே இவர்கள் கீழே விழ நேர்ந்தது.

புங்குடுதீவைச் சேர்ந்த இ. செல்வராசா (வயது 42) பொ. இராமலிங்கம் (வயது 45) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ச. குணம் (வயது35) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர். (ஒ-15)

## இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில்

யாழ்ப்பாணம், அக். 15

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை, வாடிக்கையாளர்களுக்காக இன்று திங்கள் முதல் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை திறந்திருக்கும்.

குவைத்நாடு தவிர்ந்த ஏனைய வெளிநாட்டுக் காசோலைகளும் உண்டியல்களும் மற்றும் ஸ்ரான்லி வீதிக் கிளைக் காசோலைகளும் கணக்கில் வைப்பில் இட ஏற்றுக் கொள்ளப்படும். (இ-5)

## மரணம்

யாழ்ப்பாணம், அக். 15

பூநகரி தெளிவரை காட்டுப் பகுதியில் கடந்த புதனன்று கட்டுத் துப்பாக்கி வெடித்ததினால் படுகாயமடைந்து மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த தங்கராசா (வயது 25) என்ற இளைஞர் நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானார். [உ-15]

## முல்லைத்தீவு விவசாய திணைக்களம்

முல்லைத்தீவு, அக். 15

முல்லைத்தீவு விவசாய திணைக்கள மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களும் இன்று திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு விவசாய போதனாசிரியர் அலுவலகத்தில் சமுகம் அளிக்கும்படி முல்லைத்தீவு உதவி விவசாயப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளது. (இ)

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக் 15

தமது பெயர்களை கடந்த ஆகஸ்ட் மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் பதிவு செய்து, இதுவரை வீடு திரும்பாத யாழ்-பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆனந்த குமரசாமி விடுதியில் சமூகம் தருமாறு யாழ். பல்கலைக்கழக, ... மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (இ)

## மணலாறில் 4 படையினர்பலி!

யாழ்ப்பாணம், அக். 15

மணலாறுப் பகுதியிலுள்ள கொக்கிளாய் முகத்துவார இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் தண்ணீர் எடுப்பதற்காக ஒரு மைல் தொலைவில் உள்ள ஓரிடத்துக்குச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தியதில் நான்கு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து முகத்துவார முகாமிலிருந்து வெளியேறி சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்ல முற்பட்ட இராணுவத்தினர் தமது கண்ணி வெடியில் சிக்கியதை அடுத்து முன்னேற முடியாது முகாமுக்குப் பின்வாங்கியதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது ரி56 ரக துப்பாக்கிகள் -2, ரி 81 ரக துப்பாக்கிகள் -2, அதற்குரிய ரவைக் கூடுகள் -14, ரவைகள் -990, ஜே.ஆர். ரக கிரனேட்டுகள் -2, தலைக்கவசம் -8, இராணுவ சப்பாத்துகள் -4 சோடி, ஹோல்சர் -4, தண்ணீர்க் கான் -1 ஆகியனவும் மீட்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## 30 தமிழர் படுகொலை

புதுடில்லி, அக். 15

அம்பாறை மாவட்டம் காரைதீவில் அப்பாவித் தமிழர்கள் முப்பதுபேர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தமிழ் அமைப்பு ஒன்றை ஆதாரம் காட்டி யு. என். ஐ. செய்தி ஸ்தாபனம் நேற்று அதிகாலை இத்தகவலை வெளியிட்டது.

(உ - 5)

## திருநெல்வேலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் சிலர் சிறு காயங்களுக்கு ஆளாகினர்.

கொக்குவிலைச் சேர்ந்தவர்களான பாக்கியம், ஐயாத்துரை [39 வயது], லலிதா செல்லையா [18 வயது], சிவராசா [26 வயது], தாவடியைச் சேர்ந்த ஜெயராஜ் [20 வயது], திருநெல்வேலியைச் சேர்ந்த இரத்தினேஸ்வரி [45 வயது] ஆகியோரே படுகாயமடைந்த எழுவரும் ஆவர்.

### மீண்டும் நாசம்

முன்னர் நடந்த தாக்குதல்களை அடுத்து சேதமடைந்த கடைகள் கடந்த சில தினங்களுக்கு முன்னரே ஓரளவு திருத்தப்பட்டிருந்தன. இவை மீண்டும் நாசமாகின.

ஓலையால் வேயப்பட்ட குடிசைக்கடை ஒன்று தூக்கி எறியப்பட்டு மின்கம்பம் ஒன்றின் மீது அந்தரத்தில் தொங்கிக் கிடந்தது.

விழுந்த குண்டுகளில் ஒன்றினால் சந்தைக்கு முன்பாக ஆடியபாதம் வீதியில் மூன்று வீடுகள் சேதமாகின. சந்தைக்கு அருகிலுள்ள பாடசாலையும் சேதமுற்றது.

நேற்றுத் தாக்குதலில் ஈடுபட்ட பொம்மர் புதிய ரகத்தைச் சேர்ந்ததாகக் காணப்பட்டது. [ஒ-143-69-3-5-6]

## கோட்டைக் கட்டட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றன.

கோட்டைச் சுவர் ஓரங்களில் மண்மூடைகளைஅடுக்கி, படையினர் அமைத்திருந்த ''சென்ரி''களும் ஷெல் மற்றும் ஆர்.பி.ஜி. தாக்குதலுக்கு இலக்காகி சேதமுற்ற நிலையில் காட்சிதருகின்றன.

கோட்டையின் பல பகுதிகளில் சிதைவுற்ற உயர்ந்த சட்டடங்களின் உச்சிப் பகுதிகளில் - ஆங்காங்கே புலிக் கொடிகள் பறந்துகொண்டிருக்கின்றன.

### குட்டிச் சுவர்கள்!

கோட்டைக்குள் இருந்த தேவாலயம், இராணி மாளிகை, பொலிஸ்நிலையப் பகுதி, கைதிகள் சிறைக்கூடம், படையினர் விடுதிகள் போன்றவை எல்லாம் இப்போது குட்டிச்சுவர்களாகக் காட்சியளிக்கின்றன.

கோட்டை வாசலில் இருந்த பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம் இருந்த அடையாளமே காணப்படவில்லை.

கோட்டைப் பின் பகுதியில், படையினர் தப்பிச் சென்ற வாசல் அரைவாசிப் பகுதி—சுமார் மூன்று அடி அகலத்துக்கு—திறந்து கிடந்தது.

கோட்டையின் தற்போதைய வடிவத்தை—நிலையை யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் நேற்றுச் சுற்றிப் பார்வையிட்டனர். (உ-6)

## உடுப்பிட்டியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராஜ் [7 வயது] ஆகியோரே உயிரிழந்தமூவரும்ஆவர். தனபாலசிங்கம் தனராஜ் என்ற சிறுவன் அகதியாக வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது பலாலியில் இருந்து உடுப்பிட்டிக்கு அகதியாக வந்தவர்கள் உட்பட எழுவர் காயமடைந்தனர்.

பலாலியைச் சேர்ந்தவர்களான ஆசீர்வாதம் அன்ரன் [வயது 45], முருகுப்பிள்ளை குஞ்சுப்பிள்ளை [வயது 66] ஈசாக் ஞானப்பிரகாசம் [வயது 67], இராசநாயகம் இராசம்மா [வயது 65], குரும்பசிட்டியைச் சேர்ந்த சின்னப்போடி முத்துலிங்கம் [வயது 38], வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சோமசுந்தரம் சிவநேசசுந்தரம் [வயது 40], மண்டானைச் சேர்ந்த ஆறுமுகம் நகுலேஸ்வரன் [வயது 14] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

உடுப்பிட்டிச் சந்தியில் 5 கடைகளும் கார் ஒன்றும் சேதமடைந்தன. [ஓ-15-94]

## நீல - வெள்ளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகளை வானத்தில் இருந்து பார்க்கும்பொழுது தெளிவாகத் தெரியும் வண்ணம் பறக்க வைத்தல்.

பாதுகாப்பை முன்னிட்டு இக்கொடியின் நிற அமைப்பு செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்படுகின்றது.

★ மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் மேல் இருந்து பார்க்கையில் தெரியாது இருக்கும் படி பாதுகாப்பான இடங்களில் நிறுத்தி வைத்தல்.

★ பாடசாலை விடும் பொழுது மாணவர்களை வகுப்பு ரீதியாக ஐந்து நிமிட இடைவெளியில் மாணவர் தலைவர்கள், சாரணியர்கள், ஆசிரியர்கள் உதவி உடன் பாதுகாப்பாக வெளியே செல்ல அனுமதித்தல்.

★ பெற்றோர் அல்லது பாதுகாவலர்களை இயன்ற அளவுக்குப் பாடசாலையில் தங்க வைத்து அவசியம் ஏற்படும் கால் மாணவர் பாதுகாப்பில் அவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

★ பாடசாலை நேரத்தில் மாணவர்களை எக்காரணம் கொண்டும் பாடசாலை வளவுக்கு வெளியே செல்ல அனுமதிக்காமல் இருத்தல்.

★ பாடசாலைகளில் முதலுதவிப் பெட்டிகளில் அவசர சிகிச்சைக்கு ஏற்ற மருந்து வகைகளைப் பேணி வைத்திருத்தல். (அ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15 10 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org